செ.வெ.எண்: 894 நாள்: 26.11.2009

## பத்திரிகை செய்திக்கான குறிப்பு

தமிழகத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள மருத்துவ கல்வி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை ஆகிய துறைகளில் உள்ள மருத்துவ மனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தோற்றுவிக்கப்படும் புதிய மருத்துவ அலுவலர் பணியிடங்கள் மற்றும் காலியாகும் மருத்துவ அலுவலர் பணியிடங்கள், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோரின் பட்டியலை பெற்று, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் அவர்களால் நியமன கலந்தாலோசனை முறையில் மேற்படி இடங்கள் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகிறது.

இதுவரை **மொத்தம் 20 நியமன கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. அதன் மூலம் இதுவரை, இந்த அரசு பதவியேற்றது முதல், மொத்தம் 6008 மருத்துவ அலுவலர்கள் புதிதாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.**

இன்று **(26.11.2009),** 20–வது மருத்துவ அலுவலர் நியமன கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை, எழும்பூர், சுகாதாரம் மற்றும் குடும்பநலப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. மொத்தம் **1089** மருத்துவ பட்டதாரிகளுக்கு கலந்தாலோசனைக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன. **483** மருத்துவர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் **214 மருத்துவ அலுவலர்கள்** தங்களுக்கு விரும்பிய இடங்களை தேர்வு செய்தனர். அனைவருக்கும் பணிநியமன உத்தரவுகள் **26.11.2009** அன்றே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இன்றைய கலந்தாய்வில், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், மற்றும் உதகமண்டலம் மாவட்டங்களில் அதிகமானோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் மருத்துவ அலுவலர் பணியிடம் காலியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9